# தாமரைக்குளம்

இருபுறமும் வரிசையாக பங்களாக்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதக் கட்டிடம். கட்டிடத்துக்கு முன்புறம் மோட்டார்கள் நிறுத்தும் 'போர்ட்டிகோ'. சில பங்களாக்களின் முன்பு கொடிக்கம்பங்கள் நிறுவப்பட்டிருந்தன. அரசாங்க அதிகாரிகளிலே முன்னணியில் உள்ள உத்தியோஸ்தர்களும், மந்திரிகளும் வாழும் இல்லங்கள் அவை என்று அடையாளம் கூறும் கொடிக்கம்பங்கள் இவை. 'எசமான் வெளியூர் போகவில்லை ஊரில் இருக்கிறார்' என்பதற்கு அடையாளமாகச் சில கம்பங்களின்மேல் தேசீயக் கொடி பறந்தது.

சில பங்களாக்களின் காம்பவுண்டுச் சுவரையொட்டினாற் போல் மாமரங்களும், விளா மரங்களும், இன்னும் சில மரங்களும் அரண் கட்டியிருந்தன. வேனிலின் கடுமையைக் காட்டும் மாங்காய்களும், மாம்பிஞ்சுகளும் மாமரங்களில் அடர்ந்திருந்தன. பல பங்களாக்களின் முன்புறம் செடி கொடியில்லாமல் வெறிச்சோடியது. "உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்!" என்று கோஷமிடும் பிறத்தியாருக்கு வாத்தியார்கள் வசிக்கும் இல்லங்களாக இருக்குமோ? விளக்கின் அடியில் இருட்டல்லவோ?

இப்படியெல்லாம் எண்ணமிட்டவாறே 'கண்டோன்மென்ட்' ரோட்டினை ஆராய்ந்தவாறே சைகிளில் சென்று கொண்டிருந்தேன். நான் தினமும் கல்லூரிக்குப் போகும் வழி வேறு வழி; இன்று அந்த ரஸ்தாவில் செப்பனிடும் வேலை நடந்துகொண்டிருந்ததால் இந்தக் 'கண்டோன்மெண்ட்' வழி வந்தேன். மணி ஒன்பதரைதான். ஆனால் வெய்யல் தீவிரமாகவே இருந்தது. வெய்யலைப் பொருட்படுத்தாமல் இத்தனை நாளும் வராத இடமாயிற்றே என்று சற்று நிதானமாகவே சைக்கிளை விட்டுச் கொண்டு சென்றேன்.

ஆஹா! என்ன அழகு! ஆனந்தக் காட்சி! வண்ண வண்ண மலர்களடங்கிய புஷ்ப வனம்! யாருடைய பங்களா? பங்களாவை நெருங்கும்போதுதான் அதன் எளிமையும், அழகும் நன்கு புலனாயின. வைக்கோல் கூரை வேய்ந்த பெரிய வீடுதான், பங்களாக்கட்டடம். இந்த ஊரில் வைக்கோல் கூரை வேய்ந்த பங்களாக்கள் சகஜமான காட்சிதான்; ஆதலால் நான் ஆச்சரியப்படவில்லை. ஆனால் பங்களாவின் முன்புறம் எத்தனை விஸ்தாரமான மலர்ச்சோலை? மணமுள்ள பூக்களும், மணமில்லா மலர்களும் அழகுப் புஷ்பங்களும் பலவகைகளில் பல நிறங்களில் நேர்த்தியாக அமைந்திருந்தன. ஆசிரமத்தின் எளிமையும், அரண்மனை நந்தவனத்தின் அழகும் இணைந்திருந்த அந்த பங்களாவின் யஜமானர் யாரோ என்று வியக்காமலும் பாராட்டாமலும் இருக்க என்னால் இயலவில்லை. பங்களாவின் ஆசார வாசலாகிய 'கேட்'டருகே போனால் பெயர்ப்பலகை மூலம் அறிந்துகொள்ளலாமே! ஆவலுடன் முன்னேறிய என்னை ஒரு இனிய காட்சி ஆட்கொண்டது. ஒரு கிழவன்; அவனுக்கு ஒரு முக்காலி ஆசனம். அவனுக்கெதிரே மணற் குவியலுக்குள் புதைக்கப்பட்ட ஒரு பெரிய பானை. அருகில் சில குவளைகள்.

ஆஹா! எனக்கு அருமைத் தமிழ்நாட்டின் நினைவு வந்தது. தண்ணீர்ப் பஞ்சம் கண்டுவிட்ட தமிழ்நாட்டின் நினைவு வரவில்லை, "தண்ணீர்ப் பந்தல்" என்னும் சொல்லும் தண்ணீர்த் தருமம் மட்டுமில்லாமல் சுவையுள்ள தருமம் மட்டுமில்லாமல் சுவையுள்ள நீர் மோரும் வழங்கி உயர்ந்த சேவை செய்யும் உயர்திரு தமிழ்நாட்டின் நினைவுதான் வந்தது. எனக்கும் நாவறட்சிதான்; இறங்கிக் குடிக்கட்டுமா? ஆனால் இந்தப் பக்கத்து ஜனங்கள் குவளையை உயர்த்திக் குடிக்கமாட்டார்களே? இந்தக் குவளைகளில் வாங்கிக் குடிக்க எனக்கு இஷ்டமில்லை.

கேட்டின் இருபுறமும் பார்த்தேன். பெயர் பொறித்த பலகை இருக்கவில்லை. ஊருக்கெல்லாம் நல்லவரான பிரமுகரின் இல்லம் என்பதிலே ஐயமில்லை. பெயரும் பெயர்ப் பலகையும் எதற்கு? ஆம், ரசிகத் தன்மையும், பெருந்தன்மையும், கனிவுள்ளமும் படைத்த உத்தமராக இருக்க வேண்டும் அவர். அவர் யாரோ?

•• •• ••

எனக்குப் பழக்கமாகியிருந்த நண்பர்கள் சிலரைக் கேட்டேன். ஒரே ஒருவர் மட்டும் சிறிது யோசனை செய்துவிட்டு, "பல தினுசுப் புஷ்பங்கள், புஷ்பவனம் என்று சொல்லுகிறீர்களே சார்? தெரியவில்லையா? அந்தப் பங்களாவில் இருப்பவர் வெள்ளைகாரர்தான்! அவர்கள்தான் அத்தனை அழகாக விட்டை வைத்துக்கொள்ளுவார்கள். வெள்ளைக்காரனைச் சொல்கிறோமே தவிர, அவனைப்போல கருத்தழகும் கலையுணர்ச்சியும் கொண்டவன் யார் சார்?"

எனக்கு ஏமாற்றமாயிருந்தது நண்பரின் பதில். நம் நாட்டவர்க்கு இல்லாத கலையுணர்ச்சியா என்றுதானோ?

"தண்ணீர் கைங்கரியம் செய்கிறவன் ஒரு வெள்ளைக்காரனாயிருப்பான் என்று எனக்குத் தோன்றவில்லை சார்!" என்று நான் சொல்லி முடிக்குமுன் என் தமிழ் நண்பர் "அதானே சார் வெள்ளைக்காரன் பெருமை! குடியேறிய இடத்திற்கு ஏற்றாப்போல் இருப்பான்! தன் கலாசாரத்தையும் விடமாட்டான், மற்றவர்களின் கலாசாரத்தினின்று நல்ல அம்சங்களையும் எடுத்துக்கொண்டு விடுவான்?" என்றார்.

இன்னும் என்னென்னமோ தொடர்ந்தார், சொன்னார். எனக்குத் தேவையாயிருந்த விஷயம் மட்டும் அவரால் சொல்ல முடியவில்லை.

சிலநாட்கள் 'கண்டோன்மெண்டு' வழியே கல்லூரியிலிருந்து திரும்பி வருவேன். எசமானின் கட்டளையைச் செவ்வனே நிறைவேற்றும் கிழவனையே 'உன் யஜமான் யார்?' என்று கேட்டிருக்கலாம். ஆனால் அவனைச் சுற்றி வழிப்போக்கர்கள் இருப்பார்கள். வழிப்போக்கர்கள் இல்லாவிட்டாலுங்கூட என் தயக்கம் இருக்கும்!

எத்தனையோ பிரமுகர்கள் வசிக்கும் விசாலமான அந்த ராஜபாட்டையிலே அந்தப் புஷ்பவன பங்களாவில்தான் அந்த இனிய காட்சி இருந்தது. "அவருக்கே சேரட்டும் புண்ணியமும், புகழும்" என்று விட்டுக்கொடுத்துவிட்டுத் தங்கள் பெருந்தன்மையைக் காட்டினார்கள் மற்ற பங்களாவின் வாசிகள்.

அதனால் புஷ்பவனப் பங்களாவிற்குரியவரர் யாரோ என்ற தாபம் எனக்குக் குறையவேயில்லை. குஜராத்தி நண்பர் ஒருவரைக் கேட்டேன். அவர் சிறிதும் தயங்காமல் "போஸ்டல் சூபரண்டுகளுக்காக ஏற்பட்ட பங்களா அது! இப்போது ஒரு பஞ்சாபிதான் போஸ்டல்சூபரண்டு!" என்று தகவல் தந்தார்.

"இந்தியர் பண்பு தண்ணீர்த் தருமம்! பஞ்சாபிகள் உருவத்தோற்றத்திலும் பிற விஷயங்களிலும் இந்தியர்களுக்கு மாறுபட்டவராகத் தோன்றினாலும், அவர்கள் இந்து தருமம் வழுவாத இயல்பினர்" என்று நானும் மனது சமாதானமடைந்தேன்.

கல்லூரி விடுமுறை துவங்கியது. நானும் 'கண்டோன்மெண்டு' மறந்தேன். விடுமுறையை வெளியூரிலும் தமிழ்நாட்டிலும் கழித்துவிட்டு வந்தேன்.

விடுமுறை முடிந்தாலும் வெய்யில் கடுமை போகவில்லை. 'கண்டோன்மெண்ட்' வழி சென்றேன். நீர்ப்பானை, கிழவன், புஷ்பவனம் எல்லாம் அன்று போலவே இன்றும் காட்சியளித்தன. ஆனால் பங்களாவினுள் கட்டடத்தின் விசாலனமான வராந்தாவில் ஒரு 'தோதி'க்காரர் வங்காளிபோல வேஷ்டியுடுத்தியவர் உலாவிய வண்ணமிருந்தார்!

பஞ்சாபிக்காரரைப் பார்க்க வந்த நண்பரோ?

பிறகு ஒருநாள் ஒரு வங்காளி நண்பரையே இதுவிஷயமாக வினவினேன். எத்தனை பேரைக் கேட்பது என்று கூச்சமாயிருந்த போதிலும் கேட்டுவிட்டேன்.

நண்பர் சொன்னார், "போஸ்டல் இன்ஸ்பெக்டர் பஞ்சாபியும் அல்ல, வங்காளியுமல்லவே! ஒரு தென்னிந்தியராமே! 'மூர்த்தி என்று பெயராமே!"

தென்னிந்தியர்! ஆ, தமிழர் தான்! வேறு யாருக்குத் தண்ணீர்த் தருமம் செய்யத் தோன்றும்? முதன் முதலில் அந்தக்காட்சி கண்டதுமே, தமிழ்நாடும் தண்ணீர்ப் பந்தல் என்னும் நினைப்பும் பளிச்சிட்டனவே! ஐயோ மதியீனமே!

வலுவில் போய் அறிமுகம் செய்துகொள்ளும் உரிமை எனக்கு உண்டு என்று தோன்றியது. ஆனால் உடனே துணியவில்லை நான்! விபரீதச் சந்தேகங்கள் எழுந்தன! சிலர் டம்பமாக தான தருமங்கள் செய்யலாம்; ஆனால் உள்ளம் எப்படிப்பட்டதோ? தண்ணீர் தர்மம் செய்கிற கர்வம் இருக்கலாம்; புஷ்பவனம் படைத்த அகங்காரம் இருக்கலாம்! இன்னொரு விஷயம். தண்ணீர் தர்மம், பெண்டுகளின் ஏற்பாடாக இருக்கலாம். புருஷன் "பங்களா 'கேட்டு' அலங்கோலமாகிறது!" என்று பொருமுகிறவராக இருக்கலாம்! எப்படி என் கற்பனை?

மனிதன் எத்தனையோ எண்ணமிடுகிறான், திட்டமிடுகிறான். கிட்டிமுட்டிப்போனால் காரியத்தில் பின்வாங்கும்படியாகக் கோழைத்தனம் வந்து சூழ்ந்துகொள்கிறது!

தென்னிந்தியர் மூர்த்தி தமிழர்தான், சுமுகமானவர்தான் என்று அறிந்துகொண்டபின் என்னை அறிமுகப்படுத்திக்கொள்வதுதான் உசிதம்!

தண்ணீர் தருமக் காட்சி, ஜூலை போனபின்பும் நிலைத்திருந்தது. என் ஆர்வமும் வளர்ந்தது. மலையாள நண்பர் ஒருவரை விசாரித்தேன்.

"மூர்த்தி என்பவர் தெலுங்கர்; ஆனால் அவர் மாற்றலாகிப்போய் மூன்று மாதமாச்சே! இப்போது இருப்பவர் 'மிஸ்ரோ' அல்லவா? நேற்றுகூடப் பார்த்தேனே!" என்றார் அவர்.

துணுக்குற்றேன். அவர் கொடுத்த தகவலை நம்பினேன். ஏனென்றால் ஒரிஸ்ஸா கலாசாரமும், வங்காளிகளின் கலாசாரமும் நெருங்கிய தொடர்புள்ளவை; நான் அன்று பார்த்த 'தோதிக்காரர்' இந்த மாகாணத்தைச் சேர்ந்தவரோ! 'மிஸ்ரோ' பட்டமுள்ள ஒரியாக்காரர்.

"சார், எத்தனையோபேரைக் கேட்டேன்; 'வெள்ளைக்காரன் இருக்கிறான்', 'பஞ்சாபிக்காரன் இருக்கிறான்' என்று தப்புத் தப்பாக சொன்னார்களே?" என்று என் துணுக்கத்திற்கு வழிசெய்து பார்த்தேன்.

நண்பர் சிரித்தார். "வெள்ளைக்காரனும் இருந்தான், பிறகு பஞ்சாபிக்காரனும் இருந்தான் சார் அந்த பங்களாவிலே! வருஷத்திற்கு ஒரு மாற்றல் இருக்கிறதே சார்! மூர்த்தி ஒன்பது மாதம் இருந்தார், மாற்றிவிட்டார்கள்! தொல்லை சார்!" என்றார்.

ஆம், எனக்கும் தொல்லையாயிற்றே!

நொந்த மனதிற்கு மருந்து தேட யாரை நாடிப் போனேன்? வெள்ளைக்காரனைப் புகழ்பாடியவரான தமிழ் நண்பரை நாடித்தான் போனேன்.

மூன்று வருஷங்களுக்கு முன்பு இருந்தானாம் வெள்ளைக்காரன்! அவனே புஷ்பவனம் போட்டான் என்றால்கூட மூன்று வருஷங்களாக இத்தனைபேர் பார்வையில் செழித்து விளங்குகிறதே? அதைப் பேணிப் பாதுகாத்த மூன்று மாகாணத்தவர்களின் கலையுணர்ச்சியை யார் மறுக்கமுடியும்?

தண்ணீர் தருமம் ஆரம்பித்துவைத்தவர் தெலுங்கர் மூர்த்தியாய் இருப்பார். என் நண்பர் ஆந்திரத் துவேஷியாயிற்றே! போய் மடக்கவேண்டாமா?

போனேன்; எல்லாம் கேட்டார்; செவிசாய்த்தார். ஏற்றார். மறுக்கவேயில்லை. ஆனால் . . .

"மிஸ்டர் மாலி, வாருங்களேன், கண்டோன்மெண்டு பக்கம் போய் ஒரு சுற்றுச் சுற்றி வருவோம்" என்று அவர் என்னை அழைத்துச் சென்றார்.

புஷ்பவன பங்களாவின் ஆசாரவாசலில் நின்றோம். அந்திநேரமானதால், பானை மட்டும் இருந்தது. கீற்றும், குவளையும், கிழவனும் தென்படவில்லை.

சுற்றுமுற்றும் பார்த்தோம். செடிகளுக்கிடையே எதையோ ஆராய்ந்துகொண்டிருந்த கிழவனை நண்பர் பார்த்தார்.

"ஏய், மாலி, ஆவ்!" என்று கூவி அழைத்தார். கையிலிருந்த சிறு மண்வெட்டியுடன் எங்களை அணுகி வந்து நின்றான் தோட்டக்காரக் கிழவன்.

"இந்த விட்டு யஜமானர் 'மிஸ்ரோ' தானே? இருக்கிறாரா வீட்டிலே?" என்று நண்பர் ஹிந்தியில் கேட்டதும், அவன் "சினிமா போயிருக்கிறார்கள்" என்று மறுமொழியளித்ததும் எனக்குப் புரிந்தது. ஹிந்திமொழி பேசத்தான் தெரியாது எனக்கு; பிறர் பேசினால் புரிந்துகொள்வேன்.

"எத்தனை வருஷமாய் இங்கே மாலி வேலை செய்கிறாய்?"

"நாலு வருஷமாய் இருக்கிறேன்."

"தோட்டம் எத்தனை வருஷமாய் இருக்கிறது?"

"நாலு வருஷமாகத்தான் பாபு! இங்கிலீஷ் பாபு இருந்தபோது நான் போட்ட தோட்டம்!"

"இதை விட்டுப்போக உனக்கு மனசில்லையாக்கும்! இங்கேயே இருக்கிறாய்!"

"தருகிற சம்பளம் போதும் என்று பிடிவாதமாய் இங்கே நிலைத்துவிட்டேன்; தோட்டம் பாழாகிவிடும் என்று பயமாயிருக்கு ஐயா!"

கிழவன் இப்படிச் சொன்னபோது நண்பர் ஏன் நெற்றிப்பார்வைப் பார்த்தார் என் பக்கம் திரும்பி?

இந்தியர்களின் கலையுணர்ச்சி அல்ல, இந்தக் கிழவனின் பாசம்தான் புஷ்ப வனம் அழியாத ரகசியம் என்று கூறுகிறார் போலும்!

தண்ணீர்ப் பந்தல் மர்மமல்லவா நான் விரும்பினேன்? எந்தப் புண்ணியவானின் கட்டளையை இந்தக் கிழவன் ஆர்வமுடன் தொடங்குகிறான்?

நண்பர் கேட்டார். "செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றி ஊற்றிப் பழகிய உன் கைகள், வழிப்போக்கர்களுக்குக் குடி நீரும் மொண்டு கொடுக்கிறதாமே? இந்த பாபு சொன்னார்!" என்று அழகாகக்கேட்டார்; கிழவன் என்னைப் பார்த்தான்.

"என்னமோ தோணித்து, செய்கிறேன் பாபு! வெறுமனே இருப்பானேன் என்று உட்கார்ந்த வாக்கில் என்னாலானதைச் செய்கிறேன்! வேறு என்ன செய்யமுடியும் ஐயா, என்னால்?"

"உன்னாலே செய்ய முடிந்த இந்தத் தண்ணீர் தருமங்கூடத்தான் பணக்காரர்களால் மனமுவந்து செய்யமுடியாதப்பா! எரிகிற வெய்யலில் உட்கார்ந்து பிறருக்கு குளிர்ச்சியளிக்க உன்னால்தான் முடியும்!" என்று சொல்லத்தெரியாமல் திரும்பி வந்தேன்.

"அந்த புஷ்ப வனத்திலே தாமரையும் குமுதமும்தான் இல்லை; ஏனென்றால் அங்கே குளம் இல்லையே!" என்று ஒருநாள் யாரிடமோ சொன்னேனே, அது தப்பு.

அந்த நீர்ப்பானைதான் குளம். அதிலே அன்புத் தாமரை பூத்திருக்கிறது. அடக்கம் குவிந்திருக்கிறது.

********

(சுதேசமித்திரன், நவம்பர் 9,1952)